05.03.2025

அ.வ.எண். 1071/2017 மற்றும் 8/2021, 160/2021

பி.வாசா.1 - சக்திகுமார் (எ) விஜயராகவன்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணத்தில் தலா 3.99 ½ ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது, மொத்தமாக 11 ஏக்கராக 98 ½ சென்ட் என்றால் ஆமாம். க.ச.எண்.614/1- இல் மொத்தமாக 16 ஏக்கரில் வழித்தடத்திற்கு சுடுகாட்டிற்கு 1 ஏக்கர் போக மீதம் 15 ஏக்கர் 99 செண்ட் என்றால் சரிதான். ஆவண் எண்.1069/1914 ல் வா.சா.ஆ.3 ன் படி பெ.மாரப்ப கவுண்டர், ராக்கிய கவுண்டர் சேர்ந்து 3.99 ½ ஏக்கர் சௌந்தரதேவரிடம் இருந்து கிரயம் வாங்கினார்கள் என்றால் ஆமாம். ஆதியில் RSR படி 614 காலை நான் குறிப்பிடும் 4 நபர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று அதன் RSR நகல் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் இல்லை என்றும், அது என்னிடம் காட்டப்படும் RSR ல் சக்கரைத்தேவர், சௌரித்தேவர், அந்தோணி தேவர் மற்றும் சௌந்தரதேவர் பெயரில் உள்ளது, இவர்கள் அனைவரும் சின்னப்ப தேவரின் மகன்கள். சௌரித்தேவர் என்பது தவறு அவர் பெயர் சௌரிமுத்து தேவர்.

அதில் வா.சா.ஆ.3 ஆவணப்படி சௌந்தத் தேவர் அவரது பாகத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் ஆமாம். அதேபோல் வா.சாஆ.2 படி சக்கரைதேவர் அவரது பாகத்தை விற்பனை செய்துவிட்டார். வா.சா.ஆ.4 படி சௌரிமுத்து தேவர் அவரது பாகத்தை விற்பனை செய்துவிட்டார். வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்களின் படி மீதம் அந்தோணி தேவர் மட்டும் அவரது பாகத்தை விற்பனை செய்யாமல் இருந்தார் என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணையில் ஆவண எண்.816/1934 பற்றி நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த ஆவணத்தை நான் என் தரப்பில் இந்நீதிமன்றததில் கொடுக்கவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தின் படி கோப்பண்ண கவுண்டரும், ராக்கிய கவுண்டரும் சேர்த்து 7 ஏக்கர் 99 ½

சென்ட்டை ஒரு முத்துக் கவுண்டருக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம், அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம், அது வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.3 ன் படி கிரயம் பெற்ற ராக்கிய கவுண்டர், வா.சா.ஆ.34 ல் கோப்பண்ண கவுண்டருடன் சேர்ந்து முத்துக் கவுண்டருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம், ராக்கிய கவுண்டர் பெ.மாரப்ப கவுண்டருடன் சேர்ந்து வாங்கிய சொத்தை ராக்கிய கவுண்டர் மட்டும் கோப்பண்ண கவுண்டருடன் சேர்ந்து விற்பனை செய்துவிட்டார். மேற்படி கோப்பண்ண கவுண்டர் மேலே சொல்லியபடி பாக்கியுள்ள இடத்தை அந்தோணிதேவரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.34 ல் ராக்கிய கவுண்டரின் சொத்து, அந்தோணி தேவரிடம் கிரயம் பெற்ற சொத்தை சேர்த்து 7.99 ½ ஏக்கர் விற்பனை செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 முதல் 4 மற்றும் வா.சா.ஆ.34 ஆவணத்தின்படி 614/1 காலையில் மொத்த சொத்துக்களையும் 1932 லேயே விற்பனை செய்துவிட்டதால் அதற்கு பின்னிட்டு விற்பனை செய்ய இடம் இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய தாய்மாமா சண்முகம் மற்றும் என் தாயார் 2012 ம் ஆண்டில் அவர்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்திகொண்டதாக நான் சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம், அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 04.01.2012 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் ஆவண எண்.144/2012 வா.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35 எனது வழக்கிற்கு பாதகமாக இருப்பதால் நான் இந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தவிர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.35 ல் 1936 ல் ஆவண எண்.947/1936 ன் படி க.ச.எண்.614/1 யை தங்களுக்கு சொத்து பாத்தியப்பட்டதாக மூல ஆவணங்களை காட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம்.

1934 லேயே க.ச.எண்.614/1 காலையில் மீத நிலம் இல்லாத நிலையில் 1936 ஆவணத்தை நாங்கள் காட்டி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தியது செல்லாது என்றால் சரியல்ல. 1936 கிரய ஆவணத்தை பார்த்தால் தான் இது தெரியவரும். வா.சா.ஆ.35 ஆவணப்படி க.ச.எண்.614/1E இல் உள்ள சொத்துக்களை தான் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் ஆமாம் வா.சா.ஆ.35ன் படி சுப்பாத்தாள் பெயரில் எந்த சொத்துக்களும் ஒதுக்கப்படவில்லை. மீதமுள்ள 3.99 ½ ஏக்கரை சண்மும், சுந்தராம்பாள், தெய்வாத்தாள், சரஸ்வதி ஆகியோர்கள் நான்காக பிரித்துகொண்டனர் என்றால் ஆமாம். இவர்கள் செய்துகொண்ட பாகப்பிரிவினை செல்லாது என்று தான் 1071/2017 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் 1914 மற்றும் 1934 பத்திரங்களை உரிமை ஆவணமாக காட்டவில்லை என்றால் ஆமாம்.

மேற்படி வா.சா.ஆ.35 ல் D-SCHEDULE-ல் ஒதுக்கப்பட்ட சண்முகம் சொத்திற்கு நான்கு எல்லையில் க.ச.எண்.614/1D தெற்கு என்று ஒரு எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.35 ல் உள்ள 4 அயிட்ட சொத்திற்கும் கிழக்குபுறம் தென்வடல் ரோடு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது/ என்றால் ஆமாம். அதேபோல் மேற்படி 4 அயிட்ட சொத்திற்கும் மேற்கு பக்கம் 619 ஏக்கர் காலை உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சரஸ்வதி ஒதுக்கப்பட்ட B.சொத்தில் 1071/2017 வழக்கில் உள்ள 6ம் வாதி ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 ன் படி 614/1 E ஏக்கர் காலையில் குறுக்குவெட்டாக மேல்புறம் ஒருவருக்கும், கிழபுறம் ஒருவருக்கும் நாங்கள் பிரித்துகொண்டோம் என்றால் ஆமாம்.

மேற்படி சொத்து விவரத்தில் க.ச.எண்.614/1D காலைக்கு தெற்கு என்று காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். அதேபோல் 614/1 E க்கு வடக்கு என்று இரு சொத்து விவரங்களையும் காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். A-அட்டவணை சொத்திற்கு கிழக்குப்பக்கம் ரோடு உள்ளதாக காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். அதேபோல் B-அட்டவணை சொத்திற்கு மேற்கு பக்கம் 619 நம்பர் காலை

காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த பி.வா.சா.ஆ.7 ஆவணமும் மொத்த விஸ்தீரணம் 3.99 ½ ஏக்கர் என்றால் ஆமாம். அதேபோல் வா.சா.ஆ-35 லும் மொத்த விஸ்தீரணம் 3.99 ½ ஏக்கர் என்றால் ஆமாம். வா.சா.ஆ.35 ல் உள்ள முகவரியில் தான் என் தாயார் தெய்வாத்தாள் வசிக்கிறார் என்றால் ஆமாம். வாதிகளுக்கு வா.சாஆ.35 ஆவணம் உருவாக்கப்பட்டது தெரிந்த உடனே கோயம்புத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.1472/2014 எஎன்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தான் தற்போதைய வழக்கான 1071/2017 என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.35 ல் உள்ள சொத்தும் பி.வா.சா.ஆ.7 ல் உள்ள சொத்தும் ஒரே சொத்து என்றும், 1071/2017 வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வா.சா.ஆ.35 யை சட்டப்படியானது அல்ல என்று தெரிந்து மோசடியாக பி.வா.சா.ஆ.7 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் உற்பத்தி செய்வதற்காக மோசடியான உயில் ஆவணம் நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றும், அதை தொடர்ந்து நீதிமன்றத்தில் மோசடியான தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை பொறுத்து அது எப்போது என் கைக்கு கிடைத்து என்றும் யார் வசம் இருந்தது என்றும், யாரால் என்னிடம் கொடுக்கப்பட்டது என்றும், நான் எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.7 ஆவணம் வா.சா.ஆ.35 ஆவணம் செல்லாது என்று தெரிநத் பின்னிட்டு என் தாயார் மற்றும் மற்ற பிரதிவாதிகளால் கூட்டு சேர்ந்து உருவாக்கப்பட்டதால் தான் அந்த ஆவணம் பற்றிய சங்கதிகளை நான் எனது எதிர் வழக்குரையில் முழுமையாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.35 ல் தெய்வாத்தாளின் கணவர் கந்தசாமியும், அவரது மருமகன் சத்தியமூர்த்தியும் தான் சாட்சி என்றால் ஆமாம். இன்று சத்தியமூர்த்தி இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். இந்த பி.வா.சா.ஆ.7 ல் சரஸ்வதி மருமகன் கோவிந்தசாமி, மற்றும் சுந்தராம்பாளின் கணவர் ரங்கசாமி ஆகியோர் சாட்சிகள் என்றால் ஆமாம்.

ஆனால் பி.வா.சா.ஆ.7 சமயத்தில் கோவிந்தசாமிக்கு திருமணம் ஆகவில்லை. அவர் சரஸ்வதி மகளை அப்போது திருமணம் செய்யவில்லை.

மேற்படி பி.வா.சா-ஆ.8 தீர்ப்பை பதிவு செய்யும்போது அதில் சாட்சி கையொப்பம் செய்தது சத்தியமூர்த்தியும், என்னுடைய மனைவி சசிபிரியாவும் என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்கள் எங்களது தாயார் வழி உறவினர்களுடன் நான் உருவாக்கி கொண்ட ஆவணங்கள் என்பதால் தான் 3ம் நபர்கள் யாரும் அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 தீர்ப்பில் சொல்லியுள்ள சொத்து விவரம் 614/1E என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.10 ன் படி 108/2005 என்ற வழக்கில் 6ம் வாதி ராமசாமி தாக்கல் செய்த திருத்தப்பட்ட வாதுரையில் என் தகப்பனார் கந்தசாமி தான் 1ம் பிரதிவாதி என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தகப்பனார் அசல் வழக்கு எண்.108/2005 ல் தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என் சகோதரி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். என் தகப்பனார் 1952 ல் பிறந்தார். என் தகப்பனார் வா.சா.ஆ.36 ல் பெரியாக் கவுண்டருக்கு 2 மனைவிகள் இல்லை என்று எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். என் தகப்பனார் மேற்படி எதிர் வழக்குரையில் எந்த இடத்தில் அவர் பெரியாக்கவுண்டரின் 2ம் மனைவியின் வாரிசு என்று ஒப்புகொள்ளவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ல் 2ம் பிரதிவாதி ராக்கிய கவுண்டர், 3ம் பிரதிவாதி ரங்கசாமி என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.10 ல் உள்ள 2 மற்றும் 3 பிரதிவாதிகளும் பெரியாக் கவுண்டருக்கு 2 மனைவிகள் உள்ளதாகவும், அவர்களுக்கு இரண்டு மாரப்ப கவுண்டர் என்ற மகன்கள் இருந்ததாகவும் சொல்லவில்லை என்றால் அவர்கள் வழக்கறிஞர் வைத்து அந்த வழக்கில் ஆஜராகவே இல்லை.

அசல் வழக்கு எண்.108/2005 ன் தீர்ப்புரையை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, நான் எதை வைத்து மேற்படி அந்த 2 மற்றும் 3

பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்று சொல்கிறேன் என்றால் நாங்கள் அந்த வழக்கின் நகல் எடுத்து பார்த்தேன், அதை வைத்து சொல்கிறேன். நான் பி.வா.சா.ஆ.10 யை தவிர மற்ற நகல்கள் எங்களுக்கு எதிராக இருப்பதால் அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.33 ல் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வம்சாவழி பட்டியலில் பெரியாக் கவுண்டருக்கு 2 மனைவிகள் இருந்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இந்த பி.வா.சா.ஆ.33 வழக்கு எங்களுடைய மாரப்ப கவுண்டருடைய சொத்திற்கான வம்சாவழி பட்டியல். அதில் சொல்லப்பட்டுள்ள மாரப்ப கவுண்டருக்கு மனைவி பெயர் மற்றும் தகப்பனார் பெயர் வம்சாவழி பட்டியல் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.4 வம்சாவழி பட்டியலை வாதி ஏற்றுகொள்ளவில்லை என்றால் அது தவறு. பி.வா.சா.ஆ.4 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ல் பெரியாக் கவுண்டரின் மனைவி பெயர் சொல்லவில்லை என்றால் ஆமாம். என் தகப்பனாரே பெரியாக் கவுண்டருக்கு 2 மனைவிகள் இல்லை என்று பழைய வழக்கில் மறுத்துள்ள நிலையில் நான் தற்போது அதை மறுத்து மாற்றி கூற முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கொடிவழி பட்டியலில் உள்ள சங்கதிகள் எனக்கு எப்படி தெரியவந்தது என்று என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4 வாதிகளின் சொத்தை அபகரிக்க எங்களால் உருவாக்கப்பட்ட ஒரு தன்னிச்சையான ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் பெரியாக் கவுண்டரின் மனைவி பெயர்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் என் கொள்ளுத்தாத்தா பெரியாக் கவுண்டரின் வாரிசு இல்லை என்றால் சரியல்ல.

நான் ஏற்கனவே உண்மையான உறவுமுறை வா.சா.ஆ.33 ல் சொல்லிவிட்டு அதன் பின்னிட்டு இந்த வழக்கிற்காக பி.வா.சா.ஆ.4 கொடிவழி பட்டியலை அதற்கு மாறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கொடிவழி பட்டியலை நான் ஊர்ஜிதபடுத்த நான் ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை என்றால் ஆமாம். பெரியாக் கவுண்டரின் ஒரே மகன் பெரிய மாரப்ப கவுண்டர் என்ற மாரப்ப கவுண்டர் என்றும், அவர் மாரப்ப கவுண்டர் என்றும், பெ.மாரப்ப கவுண்டர் என்று ஒரு சில இடங்களில் கையொப்பம் செய்வதும், அவரது பெயரை பதிவு செய்வதும் வழக்கமாக கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அதன் படி 1963 ல் ஆவண எண்.1156/1963 ல் அவர் வெறும் மாரப்பன் த/பெ. பெரியாக் கவுண்டர் என்று எழுதி கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆனால் வாதிகள் தரப்பில் அந்த மாரப்ப கவுண்டர் 1959 ல் இறந்துவிட்டதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

என்னுடைய முதன்மை சாட்சிய வாக்குமூலம் பத்தி 2 ல் மாரப்ப கவுண்டர், பெரிய மாரப்ப கவுண்டரின் சகோதரர்கள் என்று சொல்லியுள்ளதற்கு பெரியாக் கவுண்டரின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பெரியாக் கவுண்டருக்கு ஒரே மகன் பெ.மாரப்ப கவுண்டர் என்கிற மாரப்ப கவுண்டர் என்றும், என்னுடைய கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டர் பெரியாக் கவுண்டரின் வாரிசு இல்லை என்றால் சரியல்ல. ஆவண எண்.3810/1914 ஆவணத்தில் மாரப்ப கவுண்டர் என்று உள்ள பெயரை வைத்து மட்டும் அவர் தான் என்னுடைய தாத்தா என்று உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. ஆவண எண்.3810/1914 ஆவணப்படி என் கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டர் தான் உரிமையாளர் என்றும், அதன் பின்னிட்டு தொடர்ச்சியான வருவாய் துறை ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி மாரப்ப கவுண்டர் என்கிற பெரிய மாரப்ப கவுண்டர் என்னுடைய தாத்தா இல்லை என்று அது அந்த தனி நபரின் தனிப்பட்ட சொத்து என்றும், அவர் கிரயம் பெற்றதிலிருந்து அவர் பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் இருந்தது என்றால் சரியல்ல. 3810/1914 ஆவணத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் வாதிகளின் முந்தைய பாகஸ்தரான மாரப்ப கவுண்டருக்கு பாத்தியம் அவருக்கு பின்னிட்டு வாதிகளுக்கு தான் அவருடைய சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான ஆவணங்களின் கீழ் மாரப்ப கவுண்டர் என்கிற

பெரிய மாரப்ப கவுண்டருக்கு 7.99 ½ பாத்தியம் என்றால் சரியல்ல. 614/1 காலையில் 3810/1914 ஆவணம் மற்றும் மற்ற ஆவணங்களின் கீழ் 7.99 ½ மாரப்ப கவுண்டர் என்கிற பெ.மாரப்ப கவுண்டருக்கு பாத்தியம் இல்லை என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல.

1936 ஆவணத்தின் கீழ் சவுரிமுத்துதேவருக்கு மற்றும் சின்னப்ப தேவருக்கு விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் அந்தோணி தேவரின் மகன்கள் ஆனால் 1936 பத்திரத்தை தவிர அந்தோணி தேவரின் மகன்கள் தான் சவுரிமுத்து மற்றும் சின்னப்ப தேவர் என்பதை காட்ட நான் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வாக்குமூலத்தில் கோப்பண்ண கவுண்டர் எதன் அடிப்படையில் சொத்தை விற்பனை செய்தார் என்று நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். கோப்பண்ண கவுண்டர், அந்தோணி தேவரிடம் இருந்து சொத்துக்களை கிரயம் செய்த பின்னிட்டு 1936 ல் அந்தோணி தேவரின் வாரிசுகள் சொத்துக்களே இல்லாத நிலையில் கிரயம் செய்து கொடுத்தது தவறானது என்றால் சரியல்ல. 1936 ஆவணத்தின் கீழ் விற்பனை செய்ய அங்கு வேறு பூமியே இல்லை என்றால் சரியல்ல.

1936 ஆவணமும் செல்லாத நிலையில் அதன் அடிப்படையில் என் தாயார் மற்றும் அவரது சகோதரர்கள் ஏற்படுத்தி கொண்ட 144/2012 என்ற பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி 144/2012 என்ற பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என்பதால் தான் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை உற்பத்தி செய்து இந்த வழககு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 144/2012 வழக்கில் ஆவணத்தில் உள்ள சொத்து விவரமும் பி.வா.சா.ஆ.8 வழக்கில் உள்ள சொத்ரது விவரமும் ஒன்று என்றும், அந்த பி.வா.சா.ஆ.8 வழக்கில் நான் என் தாயாரோ மற்றும் சகோதரர்களையோ சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, ஆனால் அவர்கள் அந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை. பி.வா.சா.ஆ.8 தீர்ப்பானது எனது கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டரின் மற்ற

வாரிசுகளை சேர்க்காததாலும் எனது தாயார் மற்றும் அவர்களது சகோதரர்களை சேர்க்காததலும் அது சட்டப்படி செல்லாத தீர்ப்பு என்றால் சரியல்ல.

1071/2017 வழக்கில் உள்ள என் தாயார் மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றும் அவர்கள் ஏற்கனவே எனக்கு முன்பாக பிறந்து உலக விசயங்களை தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்காக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள மாரப்ப கவுண்டர் என்னுடைய கொள்ளுத்தாத்தா இல்லை அது அவருடைய தனிப்பட்ட சொத்தும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பிரதிவாதிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் ஆமாம். அது உண்மையான ஆவணம் இல்லை என்பதால் தான் அதில் யாரும் பின்னிட்டு வரும் பிரச்சனையை தவிர்ப்பதற்காக யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.14 ஆவணம் எனது கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழ் மற்றும் பி.வா.சா.ஆ.15 என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழ். பி.வா.சா.ஆ.14 ல் 1962 ம் ஆண்டின் இறப்பு, பிறப்பு சட்டத்தின் படி கொடுக்கப்பட்ட ஆவணம் என்று காட்டப்பட்டுள்ளது ஆனால் இறப்பு தேதி 1959 என்றால் ஆமாம். இதேபோல் தான் வாதிகளும் அவர்களது மூதாதையரான மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்றிதழையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள், பி.வா.சா.ஆ.14 படியே கொடுக்கப்பட்ட வாதிகள் தாக்கல் செய்த இறப்பு சான்றிதழை போலியானது என்று சொல்ல எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ல் உள்ள படி எனது கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டரின் தகப்பனார் பெயர் பெரியாக்கவுண்டரே இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் மாரப்ப கவுண்டர் எங்கு வைத்து இறந்தார் என்றால் முகவரி சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.14 ஆவணம் 2019 ம் ஆண்டில் பெறப்பட்ட ஆவணம் என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.14 மாரப்ப கவுண்டரின் இறப்பை பதிவு செய்த நாங்கள் அவரது வாரிசு சான்றிதழை ஏன் வாங்கவில்லை என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பெரியாக் கவுண்டருக்கு, மாரப்ப கவுண்டர் வாரிசு இல்லை என்பதால் தான் நாங்கள் வாரிசு சான்றிதழ் பெறவில்லை என்றால் சரியல்ல. பெரியாக் கவுண்டரின் மகன் மாரப்ப கவுண்டர் இல்லை என்பதால் தான் அவர் இறந்த விலாசம் சொன்னால் அது தெரியவந்துவிடும் என்று எங்கு இருந்தார் என்ற விலாசம் எழுதப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் யார் தகவல் சொன்னார்கள் என்ற குறிப்புகள் இல்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் என்னுடைய தாத்தா மாரப்ப கவுண்டரின் இறப்பு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரிய மாரப்ப கவுண்டருக்கு உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் உள்ளதாக நான் சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

உணவு இடைவேளைக்கு பின் குறுக்குவிசாரணை தொடரும்.

<u>உணவு இடைவேளைக்கு பின்னிட்டு மதியம் 2.25 மணிக்கு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1914 ல் இருந்து எனது கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டர் என் தாத்தா மாரப்ப கவுண்டர் அவருடைய மகன் என் தகப்பனார் கந்தசாமி ஆகியோர் வழக்கு சொத்து தங்களுக்கு பாத்தியம் என்று எழுத்துபூர்வ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். 108/2005 வழக்கு கந்தசாமிக்கும், ராமசாமிக்கும் நடந்தபோது கூட என் தகப்பனார் தாவா சொத்தின் பெயரில் விளம்புகை கேட்டு வழக்கு எதுவூம் தாக்கல் செய்யவில்லை. வாதி, அவரது சாட்சியத்தில் 1914 ல் இருந்து ராமசாமி மற்றும் அவர்களது முன் பாத்தியஸ்தர்கள் பெயரில் ஆவணங்கள் உள்ளதாக தாக்கல் செய்துள்ள நிலையில் நாங்கள் எங்களது பெயரில் வருவாய் துறை ஆவணங்களை மாற்ற நடவடிக்கை எடுத்தோமா என்றால் மனுத்தாக்கல் செய்து அது RDO நீதிமன்றத்தில் முடிவடைந்து தற்போது DRO நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

RDO நீதிமன்றத்தில் முதலில் மனுத்தாக்கல் செய்தது 1ம் வாதி மனோகரன். 1ம் வாதி மனோகரன் தாக்கல் செய்த RDO மனுவானது நான் நடவடிக்கை எடுத்ததை காட்டாது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.8 தீர்ப்பிற்கு பின்னிட்டு நாங்கள் பட்டாவில் பெயர் மாற்றம் செய்வதை எதிர்த்து தான் மனோகரன் மேற்படி RDO நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். 2019 ம் ஆண்டில் தான் எங்களது பெயர் பட்டாவில் சேர்ந்தது என்றால் ஆமாம். அதற்கு முன்பாக 2014 ல் இருந்தே 1071/2017 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். 1071/2017 வழக்கில் உள்ள என்னுடைய தாயார் உட்பட மற்ற பிரதிவாதிகள் பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

1071/2017 வழக்கில் உள்ள பிரதிவாதிகளுக்கோ, எனக்கோ, தனபாலுக்கோ, வழக்கு சொத்தில் எவ்வித உரிமையோ, உடைமையோ, அனுபவமோ இதுநாள் வரை இருந்தது இல்லை என்றும், அந்த சொத்தில் எந்த உரிமையும் நான் கேட்க முடியாது என்றால் சரியல்ல. RDO நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. அதனால் தான் உயர்நீதிமன்றததில் WRIT PETITION தாக்கல் செய்து அந்த உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு அதன் பின்னிட்டு உத்தரவானது, என் அண்ணன் இறந்த பின்னிட்டு வாரிசுகளை சேர்க்காமல் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. என் அண்ணன் இறப்பதற்கு முன்பாகவே அந்த வழக்கு தீர்ப்பிற்கு முன்பாக எடுத்து வைக்கப்பட்டு விட்டது என்றால் இல்லை. அதற்கு பின்னிட்டு நான் என் சகோதரர்களின் வாரிசுகளை RDO மனுவில் சேர்க்கவில்லை என்றும், சரியான முறையில் விசாரணை நடைபெறவில்லை என்றும் வேறு ரிட் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

3ம் தரப்பினர்கள் வாதிகள் தரப்பில் RDO நீதிமன்றததில் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள் என்றால் இல்லை, நான் என் வழக்கறிஞர் மூலம் இந்த வழக்கில் ஆஜரானேன் என்றால் ஆமாம். நான் DRO விடம் தாக்கல் செய்த

மேல்முறையீட்டு மனுவில் RDO உத்தரவில் ஏற்பட்ட குறைபாடுகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி RDO உத்தரவில் எனது வழக்கின் அடிப்படையான உயில் ஆவணத்தில் உள்ள சொத்து என் கொள்ளுத்தாத்தா மாரப்ப கவுண்டருக்கு பாத்தியம் இல்லை என்று முடிவானது என்றால் இல்லை. 2019 ல் எங்களது பெயரில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யும்போது முந்தைய பட்டாதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றால் ஆமாம். அதனால் தாசில்தாரின் நடைமுறை தவறானது என்று RDO தீர்ப்பு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் என் தரப்பு சாட்சியம் முன்பே மேற்படி RDO உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் ஆமாம்.

அதன் பின்னிட்டு நான் தாக்கல் செய்த என்னுடைய சாட்சிய வாக்குமூலத்தில் மேற்படி RDO உத்தரவில் உள்ள குறைகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக RDO முறையாக விசாரணை செய்யவில்லை என்று நடைமுறைகளை பின்பற்றவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் ராமசாமிக்கு அத்தைகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் ரங்காத்தாள், கருணையம்மாள், ராமசாமியின் உடன் பிறந்தவர்கள் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.4 தங்கவேல் என்னுடைய பெரியப்பாவின் மகன். என் பெரியப்பாவின் பெயர் ராக்கியப்பன், என் தகப்பனார் கந்தசாமியின் உடன் பிறந்தவர். அவரை வாதிகள் தரப்பில் விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்று நான் சொல்லியிருந்தேன்.

அவர் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்னர் அவரை சாட்சியம் அளிக்க செல்லவிடாமல் நான் அவரை தாக்கி என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவர்தான் என்னை அடிக்க வந்தார், நாங்கள் இருவரும் தற்போது மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பெயரில் பிணையில் உள்ளோம் என்றால் ஆமாம். நான் அவரை சாட்சியம் அளிக்க வர வேண்டாம் என்று நான் சொல்லி அது அவர் கேட்காததால்

அவரை தாக்கினேன் என்றால் சரியல்ல. வாதிகள் அவர்களது குடும்பத்திற்குள் அ.வ.எண்.273/2012 என்ற வழக்கை திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவின் கீழ் பாகப்பிரிவினையை 12468/2012 என்ற ஆவணத்தின் கீழ் சார் பதிவாளர் அலுவலகம் சூலூரில் பதிவு செய்துள்ள விவரம் 1071/2017 என்ற வழக்கில் சொல்லியுள்ளார்கள் என்றும், அதில் உள்ள பிரதிவாதிகளுக்கு அந்த சங்கதிகள் வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை தீர்ப்பின் கீழ் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை எதிர்த்து பிரதிவாதிகளோ மற்றும் நாங்களோ எந்த நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆமாம்.

அ.வ.எண்.273/2012 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பும் ஆவண எண்.12468/2012 ஆவணமும் இந்த வழக்கு பிரதிவாதிகளையும், மற்ற வழக்கில் பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.273/2012 வழக்கு பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்று நான் எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை. வாதிகள் 2012 ல் என் தாயார் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பின்னிட்டும் நான் ஏற்படுத்திய உயில் ஆவணத்திற்கு பின்னிட்டும் அவர்கள் அவர்களது உரிமையை தக்கவைத்து கொள்ள முறையாக வழக்கும் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. 6ம் வாதி ராமசாமியின், தகப்பனார் மாரப்ப கவுண்டருக்கும் என்னுடைய பாட்டனார் மாரப்ப கவுண்டருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 உயில் ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் நாங்களாகவே உற்பத்தி செய்துகொண்டது மற்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை எழுதி கொடுக்க என் தாத்தா மாரப்ப கவுண்டருக்கு எந்த உரிமையும், உடைமையும் இல்லை என்றும், அது சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 1914 முதல் நானோ, என் மூதாதையர்களோ வழக்கு சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.39/2024 காலவரையறை சட்டத்தால்

பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை பதிவு செய்யும்போது தனபால் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தார். மேற்படி பத்திர பதிவின் போது உள்ள தனபாலின் கையொப்பத்திற்கும் வழக்கில் தாக்கல் செய்த சமரச மனுவில் உள்ள தனபாலின் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றும், நீதிமன்றத்தில் தனபால் ஆஜராகவே இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி வழக்கில் தனபால் ஆஜராகாமல் நானே ஒரு மனுவை தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சமரச மனுவில் ஏற்பட்ட உத்தரவின் கீழ் நானும், தனபாலும் பவர் பத்திரம் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சமரச ஒப்பந்தத்தின் கீழ் ஏற்பட்ட பவர் பத்திரத்தின் அடிப்படையில் நாங்கள் கிரய பத்திரம் எழுதி கொடுக்கவோ, கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தவோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்தங்கள், பொது அதிகார பத்திரங்கள் சட்டத்திற்கு புறம்பான ஆவணத்தின் கீழ் ஏற்படுத்தபட்டதால் அதுவும் செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி என் தாயார் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம், மற்றும் நான் ஏற்படுத்திய சமரச தீர்ப்பாணை அதன் அடிப்படையில் ஏற்பட்ட பொது அதிகார பத்திரம் மற்றும் கிரய ஒப்பந்தபத்திரம் சட்டப்படி செல்லாது என்று தீர்ப்பாணை பெற வாதிக்கு தகுதி உள்ளது என்றால் சரியல்ல.

எங்களிடம் கிரய ஒப்பந்தம் பெற்ற ரஞ்சித் இந்த வழக்கில் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை, நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை ஏற்றுகொண்டுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் பெயரளவில் கிரய முன்பணம் எதுவும் பெறாமல் ரஞ்சித்துடன் ஏற்படுத்தப்பட்டதால் மேற்படி ரஞ்சித் இந்த வழக்கில் தனியாக வழக்கு நடத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்தம், மற்றும் பொதுஅதிகார பத்திரம் நாங்கள் வாதிகளை துன்புறுத்தவே நாங்கள் உற்பத்தி செய்துகொண்டது என்றால் சரியல்ல. எனவே அ.வ.எண்.1071/2017, 8/2021 மற்றும் 160/2021 வழக்குகளில்

வாதிகள் கோரியபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு எதிராக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முதன்மை சாட்சியங்கள் அனைத்தும் ஆதாரமற்றது என்றால் சரியல்ல. 2012 ம் ஆண்டில் இருந்து ஆவணங்களை உற்பத்தி செய்து வருவதால் அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்திலும் எனது குடும்பத்தில் உள்ள நபர்களே சாட்சியமாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 2012 ல் இருந்து எங்களது குடும்பத்தார் உருவாக்கிய ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாக்கள்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/சக்திகுமார் (எ) விஜயராகவன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur